# பெரம்பலூர் நகராட்சி

**2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் – 31-ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 596<br>பதிவு செய்யப்பட்டது |
| 31.08.2021 | **பொருள் 02 :** பெரம்பலூர் நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 597<br>பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 03 :** இந்நகராட்சியின் வார்டு எண்.8–ல் வடக்குதெரு என்ற முகவரியில் திரு.M.கணேசன் த/பெ. முத்துசாமி என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு (SUC) திடக்கழிவு மேலாண்மை திட்டம் பயனீட்டாளர் கட்டணம் கூடுதலாக உள்ளது எனவும் குறைவாக நிர்ணயம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி மனுதாரரின் கட்டிடத்தினை வருவாய் ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்ததில் வருவாய் ஆய்வாளரின் குறிப்பில் மனுதாரரின் கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டு சொத்துவரி வரிவிதிப்பு எண்.089/008/00727 ஐ இடத்தினை அலுவலக அறையாக பயன்படுத்தப்படுகிறது எனவும் இவ்வரிவிதிப்பிற்கு விதிகளின்படி SUC கட்டணம் அரையாண்டிற்கு ரூ.1800/– நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் ஆனால் தவறுதலாக அரையாண்டிற்கு ரூ. 6000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும், அதனை விதிகளின்படி மாற்றி நிர்ணயம் செய்யலாம் எனவும் ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளார். துப்புரவு ஆய்வாளரின் நேராய்வு குறிப்பிலும் வரிவிதிப்பு எண். 089/008/00727 ஒரு அறை மட்டும் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது எனவும், ஏற்கனவே தவறுதலாக ரூ.6000/– என உள்ளதை விதிகளின்படி அரையாண்டிற்கு (SUC) திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின்படி பயனீட்டாளர் கட்டணம் அரையாண்டிற்கு ரூ.1800/– என நிர்ணயம் செய்யலாம் என ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளார்.<br>எனவே மேற்படி வரிவிதிப்பு எண்.089/008/00727 –ன் அலுவலக பயன்பாட்டிற்காக அறையாக பயன்படுத்தப்பட்டு வருவதால் வருவாய் ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் நேராய்வு அறிக்கையின்படியும் (SUC) திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின்படி பயனீட்டாளர் கட்டணம் அரையாண்டிற்கு ரூ.6000/– என உள்ளதை அரையாண்டிற்கு ரூ.1800 என நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி வரிவிதிப்பு எண்.089/008/00727க்கு 2020–2021 முதல் அரையாண்டு மற்றும் 2020 – 2021 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவை தொகை ரூ.8400/– கேட்பு நீக்கம் செய்யவும் மற்றும் நடப்பு ஆண்டில் (2021 – 2022) அரையாண்டு SUC கட்டணம் ரூ.1800/– என நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.3903/2021/அ1.</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 598 அனுமதிக்கப்பட்டது |

31.08.2021

**பொருள் 04 :** இந்நகராட்சி பொது சுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட விவரப்படியான இரண்டு வாகனஙகளுக்கு வாகன காப்பீடு **14.08.2021** மற்றும் **24.08.2021** ம் தேதிகளில் முடிவடைவதால் அதனை **2021–22** ம் ஆண்டிற்கு புதுப்பிக்க கீழ்கண்டவாறு United Inida Insurance Co Ltd நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **வண்டி எண் விபரம்** | **வாகன காப்பீடு கட்டணம்** | **காப்பீடு முடிவடையும் நாள்** |
|---|---|---|---|
| 1. | TN46 P 4158 | 38,467 | 14.08.2021 |
| 2. | TN46 P 1483 | 31,029 | 24.08.2021 |
| | மொத்தம் | 69,496 | |

மேற்கண்ட விவரப்படி இந்நகராட்சி வாகனஙகளுக்கு வாகன காப்பீடு புதுப்பிக்க உண்டான செலவினம் ரூ. 69,496/– ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு : -</u>**

**1.** மன்றம் அனுமதி வழஙகலாம்.

**2.** பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 2388/எச்1/2021</u>**

நகர்மன்றத் தீர்மான எண். **599** அனுமதிக்கப்பட்டது

---

31.08.2021

**பொருள் 05 :** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவுகள் சேகரம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் TN46 P 1483 வாகனத்திற்கு புதிய பேட்டரி வாஙகுவதற்கு கீழ்கண்ட நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விபரம் | Sri Kalpana Battery Centre Perambalur | Kannan Battery Point Trichy | Imperial Battery Corner Trichy |
|---|---|---|---|---|
| 1. | Exide Xpress – XP 1000 New Battery | **6700/–** | **6900/–** | **7000/–** |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Kalpana Battery Centre Perambalur நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதித்து வேலை உத்திரவு வழஙகவும் புதிய பேட்டரி கொள்முதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

**1.** மன்றம் அனுமதி வழஙகலாம்.

**2.** பொது சுகாதார பணி அத்தியாவசிய பணி என்பதாலும் திடக்கழிவு சேகரம் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி கொள்முதல் செய்யவதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 3584/எச்1/2021</u>**

நகர்மன்றத் தீர்மான எண். **600** அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 06 :** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் தெற்குப்பகுதியில் முதல் தளத்தில் கடை எண். 20, வரிவிதிப்பு எண்089/000372 ன் உரிமம் திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்பரின் பெயரில் உள்ளது. மேற்படி கடையின் உரிமையாணைதாரர் திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்பவரும் திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்ற இருவரும் மேற்படி கடையில் கூட்டாக தொழில்நடத்தி வருவதாகவும், தற்போது திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை தனது பெயரில் மாற்றி தருமாறும் திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் 24.06.2021 ம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார்.<br><br>திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்பவர் தானும் திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவரும் மேற்படி கடையில் கூட்டாக வியாபாரம் செய்து வந்ததாகவும், தற்பொழுது தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட சம்மதம் தெரிவித்து நோட்டரி பப்ளிக் (Notary Public) மூலம் அத்தாட்சி செய்யப்பட்ட முத்திரை தாளில் உறுதி மொழி பத்திரம் அளித்துள்ளார்.<br><br>இது தொடர்பாக வருவாய் ஆய்வரின் 17.8.2021 ம் தேதிய நேராய்வு குறிப்பிலும், மேற்படி கடையின் உரிமத்தை திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் பெயரில் மாற்றம் செய்திட பரிந்துரை செய்துள்ளார். அதனை தொடர்ந்து, மேற்படி இரண்டு நபர்களையும் 25.8.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைத்து விசாரணை செய்ததில் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ. வேலுச்சாமி, என்பவர் சம்மதம் தெரிவித்து வாக்கு மூலம் அளித்துள்ளார். மேற்படி பெயர் மாற்ற விண்ணபம் நோட்டரி பப்ளிக் மூலமான உறுதி மொழிப்பத்திரம், வருவாய் ஆய்வரின் நேராய்வு அறிக்கை மற்றும் நேரடி விசாரணையின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.3.7.2007 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பெரம்பலூர் நகராட்சி புதிய பேருந்து நிலையம் தெற்குப்பகுதியில் முதல் தளத்தில் கடை எண். 20, வரிவிதிப்பு எண்089/000372 ன் உரிமத்தினை திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்ற பெயரிலிருந்து திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு:–</u><br>அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.3.7.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டும் அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர்மாற்றம் செய்துதர அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நெறிமுறைகளின்படி பெயர்மாற்ற விண்ணப்ப கட்டணம் ரூ.500/– 12 மாத வாடகை தொகைக்கு இணையான பெயர்மாற்ற கட்டணம், 12 மாத வாடகை தொகைக்கு இணையான குத்தகை முன்பணம் ஆகியவற்றை வசூலித்துக்கொண்டு மேற்படி கடையின் உரிமையாணையை திரு.ஏ.ஜெயக்குமார், த/பெ.வேலுச்சாமி, என்ற பெயரிலிருந்து திரு.மு.செல்வராஜ் த/பெ முத்துசாமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண்.3293 /2021 / அ2</u> | நகர்மன்றத் தீர்மான எண். 601 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 07 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட1 முதல் 21 வரை உள்ள குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீரை மாதந்தோறும் ஆய்வு செய்து பயன்பாட்டிற்கு உகந்ததா என்று சான்று பெறுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படியும் மேலும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான கிணறுகளின் நீரை ஆய்வு செய்து தரச்சான்றிதழ் பெருமாறு கூறிய அறிவுரைக்கிணஙக மேற்கண்ட கொள்ளிடம் கூட்டு குடிநீர் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கிணறுகளின் நீரினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வாரியம் மூலம் ஆய்வு செய்திட வேண்டியுள்ளதால் மேற்படி ஆய்வு கட்டணத் தொகை ரூ.50,000 ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1.மன்றம் அனுமதி வழஙகலாம்<br>**ந.க.எண். 9467/2012/ இ2** | நகர்மன்றத் தீர்மான எண். 602 அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2021 | **பொருள் 08 :** இந்நகராட்சியின் பொது நிதி - **2021 - 2022** ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்படி பணிகளுக்கு 20.07.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிட விளம்பர அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள் வழியாக தமிழக நியூஸ் என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.43680/–(பில்எண். 1119/ நாள்.10.07.2021) வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட தமிழக நியூஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1.மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>**ந.க.எண். 3233/2021/ இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 603 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 09 :** இந்நகராட்சியின் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் (TURIP) - **2018 – 2019** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ளுவதற்கு 12.09.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிட விளம்பர அறிவிப்பு **Accord Advertising Agencies** என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ. 71820/– (பில்எண். AAA / 0518/ 18- 19 நாள்.29.08.2018 ) வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட **Accord Advertising Agencies** என்ற நிறுவனத்திற்கு தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்<br>**ந.க.எண். 5068/2018/ இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 604 அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2021 | **பொருள் 10 :** இந்நகராட்சியின் 14 வது மத்திய நிதி குழு (14 CFC) - **2019 – 2020** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ளுவதற்கு 28.01.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிட விளம்பர அறிவிப்பு **Mark Media** என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ. 19824/– (பில்எண். 1084/ நாள்.10.01.2020 ) வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட **Mark Media** என்ற நிறுவனத்திற்கு தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்<br>**ந.க.எண்.000060/2020/ இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 605 அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2021 | **பொருள் 11 :** பெரம்பலூர் நகராட்சியில் சாதனை தொடர்பாக பொதுமக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழில் வெளியிடு செய்ய வேண்டி நகராட்சியின் சாதனைகள் தொடர்பாக சாதனை மலர் மற்றும் தொழில் மலரில் வெளியீடு செய்திட வேண்டி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதன்படியும் மேலும் தமிழக முதல்வர் அவர்களின் வருகையும் நாளிதழில்களில் வெளியிடு செய்தி வேண்டி 2021-2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்<br>**ந.க.எண். 10718/2017/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 606 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.08.2021</td>
<td>பொருள் 12 : இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ல் உள்ள ஆலாம்பாடி ரோடு சமத்துவபுரம் பகுதி மற்றும் வார்டு எண் 19 பெரிய தெற்கு தெரு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்வதற்கு ரூ.4.67 இலட்சத்திலும் மற்றும் வார்டு எண் 11 ல் உள்ள புதிய பேருந்து நிலையம் அரியலூர் ரோடு பகுதி , வார்டு எண் 03 பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடத்தை மராமத்து பணி செய்வதற்கு ரூ.4.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>ந.க.எண். 13575/2015/இ1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 607<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.08.2021</td>
<td>பொருள் 13 : 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 15 ன் கீழ் ஆகஸ்ட்–2021ம் மாதத்தில் மேற்கொண்ட செலவினங்கள் விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><u>தொகை வழங்கப்பட்ட பட்டியல்</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>தொகை வழங்கப்பட்ட தேதி/ Section 15 Reg. Page NO.</th><th>பணி விபரம்</th><th>பட்டியல் எண்/ தேதி</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>01</td><td>13.08.2021/10</td><td>Covid-19 தொடர்பாக தற்காலிக தடுப்பரன் அமைக்கும் பணி. வார்டு எண் 17, 18 மற்றும் 19<br>ROC No.2725/2021/E1</td><td>CJV/20-21/ RF000014 Dt:13/08/2021</td><td>2,84,684-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>1.மன்றம் பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.2384/2020/பி1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 608<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.08.2021</td>
<td>
பொருள் 14 : இந்நகராட்சியின் 8பொது நிதி 2021- 2022 ஆம் ஆண்டு நிதியின் கீழ் பெரம்பலூர் மாவட்ட நகராட்சி வளாகத்தில் 15.08.2021 ஆம் நாளன்று நடைபெறும் சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாட 10.08.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீடு தொகை : 1.00 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>98000</td><td>(–) 1.51%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s. V.B. sociates ஒப்பந்ததாரர், சென்னை</td><td>101200</td><td>1.71 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 1.51%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி பொது நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண் : 03930/2021/இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 609 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.08.2021</td>
<td>

**பொருள் 15 :** இந்நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கிவரும் புதிய பேருந்து நிலையம் மற்றும் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வரும் இரண்டு அம்மா உணவகங்களுக்கு தினசரி காய்கறிகள் வினியோகம் செய்திட விலைப்புள்ளிகள் கோரியதில் 28.06.2021 அன்று வரப்பெற்றுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி விபரம் | ஒரு மாதத்திற்கான விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு. கே.ராஜா<br>R.J.K தினசரி காய்கறி கடை, வடக்கு மாதவி ரோடு, பெரம்பலூர் | 1,48,000/– |
| 2 | திருமதி. ஆர். ராணி<br>மகாராஜா காய்கறி கடை, தினசரி காய்கரி மார்கெட், பெரம்பலூர் | 1,49,000/– |
| 3 | திருமதி. என். கமலா<br>B.S காய்கறி வியாபாரம், தினசரி காய்கரி மார்கெட், பெரம்பலூர் | 1,45,000/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 ல் கண்டுள்ள திருமதி. என். கமலா, B.S காய்கறி வியாபாரம், தினசரி காய்கரி மார்கெட், பெரம்பலூர் என்பவரது விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அம்மா உணவக வினியோகத்தின் அவசர மற்றும் அவசிய தேவையினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 16393/2015/அ2**

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 610<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **பொருள் 16 :** பெரம்பலூர் நகராட்சிக்கு புதிய தனி குடிநீர் திட்டம் அமைக்க ரூ.**192.92** கோடி உத்தேச மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ. 5.00 இலட்சம் செலுத்திடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வழியாக தெரிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் நகராட்சி பகுதிக்கு என தனிகுடிநீர் திட்டம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ. **5.00** இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெரம்பலூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டது.<br>அதன்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திடவும் அதற்குரிய திட்ட ஆய்வு பணிகளுக்கான முன் கேட்பு தொகை செலுத்திடவும் இந்நகர் மன்ற தீர்மான எண் **201** நாள். 29.11.2019 ல் அனுமதி பெற்று **23.12.2019** அன்று ரூ. **5.00** இலட்சம் ஆய்வு கட்டணம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து **192.92** கோடியில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை மறு ஆய்வு செய்து **17.72** MLD குடிநீர் வழங்கும் வகையில் இந்நகருக்கு தனி குடிநீர் திட்டம் தயார் செய்யவும் அதன்படியான மதிப்பீட்டுத் தொகையில் 0.5% தொகையை ஆய்வு கட்டணமாக செலுத்திடவும் ஒப்புதல் அளிக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட உருவாக்க கோட்ட நிர்வாக பொறியாளரின் கடிதத்தில் கோரியதற்கிணஙக திருத்திய திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தனிக்குடிநீர் திட்டம் அமைத்திடவும் அதற்கான 0.5% ஆய்வுக்கட்டணத்தை செலுத்திடவும் சம்மதம் தெரிவிக்க நகர்மன்ற தீர்மான எண் **411** நாள். **30.11.2020** ன் மூலம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பபட்டது.<br>தொடர்ந்து நிர்வாக பொறியாளர் திட்ட உருவாக்க கோட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருச்சி அவர்கள் **02.07.2021** ம் தேதி கடிதத்தில் ஆலாம்பாடி ரோடு, அசோக்நகர் , ரோஸ்நகர் , அரணாரை மற்றும் துறைமஙகலம் ஆகிய பகுதிகளில் நீர்தேக்க தொட்டிகள் அமைத்து கொள்ள ஆட்சேபனை சான்று வழஙகிட கோரியதன் அடிப்படையில் நகராட்சிக்கு சொந்தமான அசோக்நகர், ரோஸ்நகர், மற்றும் துறைமஙகலம் ஆகிய **3** இடஙகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்திட இந்நகர் மன்ற தீர்மர்ன எண் **588** நாள். **23.07.2021** ல் அனுமதி பெற்று ஆட்சேபனையின்மை சான்று அனுப்பி வைக்கப்பட்டது.<br>எஞ்சியுள்ள அரணாரை மற்றும் ஆலாம்பாடி பகுதிகளில் வருவாய் துறைக்கு சொந்தமான இடத்தில் ஆட்சேபனையின்மை சான்று வழஙகிட கோரிய நிலையில் நகராட்சி மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடனான கூட்டாய்வினைத் தொடர்ந்து நகராட்சிக்கு சொந்தமான அரணாரையில் உள்ள AVR நகர் மற்றும் ஆலாம்பாடி சாலையில் உள்ள சமத்துவபுரம் ஆகிய **2** பகுதிகளில் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கோரியதன் அடிப்படையில் மேற்படி பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துக்கொள்ள ஆட்சேபனையின்மை சான்று வழஙகிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். **611** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>பெரம்பலூர் நகராட்சிக்கென தனிக்குடிநீர் திட்டம் அமைத்திட நகராட்சி எல்லைக்குட்பட்ட அசோக்நகர், ரோஸ்நகர், அராணரை , ஆலாம்பாடி மற்றும் துறைமங்கலம் பகுதிகளில் தனிகுடிநீர் திட்டத்திற்கான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்துக்கொள்ள ஆட்சேபனை இல்லை என தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிட நிர்வாக பொறியாளர் , திட்ட உருவாக்க கோட்டம் , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருச்சி அவர்கள் 02.07.2021 ம் தேதி கடிதத்தில் கோரியுள்ளதன்படி மேற்படி நகராட்சிக்கு சொந்தமான அசோக்நகர், ரோஸ்நகர், மற்றும் துறைமங்கலம் இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்திட இந்நகர் மன்ற தீர்மான எண் 588 நாள். 23.07.2021 ல் அனுமதி பெற்று ஆட்சேபனையின்மை சான்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மற்றும் நகராட்சி அலுவலர்களுடான கூட்டாய்வில் அரணாரை மற்றும் ஆலாம்பாடி பகுதிகளில் வருவாய் துறைக்கு சொந்தமான இடம் இல்லாததால் நகராட்சிக்கு சொந்தமான இடத்திலே அமைத்து கொள்ள சம்மதம் தெரிவிக்க கோரியுள்ளனர். எனவே தற்போது ஏற்கனவே ஆட்சேபனையின்மை சான்று வழஙகிய பகுதியை தொடர்ந்து கூடுதலாக அரணாரை பகுதியில் உள்ள AVR நகர் மற்றும் ஆலாம்பாடி சாலையில் உள்ள சமத்துவபுரம் பகுதியில் மேல்நிலைநீர்த் தேக்க தொட்டி அமைத்து கொள்ள ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 009594/2015/இ1** | |

// ஒம் // திரு . S. குமரிமன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி